**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் புரட்டாசி திங்கள் 07–ம் நாள்

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23–ம் நாள் செவ்வாய்க்கிழமை

******

**இடைமனு எண். 04/2024–ல் – அசல் வழக்கு எண். 190/2021**

1) நரசிம்மன்

2) காசிராஜன்

3) முருகவேல் .....மனுதாரர்கள்/வாதிகள்

...எதிராக...

1) அகோரம்

2) சார்–பதிவாளர்,

சீர்காழி .... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு R.கார்த்திக்ராஜன் அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

பிராதை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–6 விதி 17–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.23 11:59:39 +0530

மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராகி கட்சி செய்து வருகின்றார்கள். அசல் வழக்கில் பிராது தாக்கல் செய்யும் போது தட்டச்சு பிழையாக 2–வது ஒரு சொத்தில் வழக்கு தரப்பினர்களுக்கு தொடர்பு இல்லாத சொத்து சொத்து விபரத்தில் சேர்த்து தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. அது முழுவதும் தட்டச்சு பிழையாகும். அதனை நீக்கம் செய்து அசல் பிராதை திருத்தம் செய்ய வேண்டிய அவசியமாகும். இல்லையேல் மனுதாரருக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் சம்பவிக்கும். எனவே மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்து உத்திரவிடக் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

மனுதாரர்கள் மனு சரியல்ல. சட்டப்படியும் நியாயப்படியும் நிலை நிற்க கூடியது அல்ல. தட்டச்சு பிழை என்று கூறி சொத்து விபரத்தில் புதிய விவரங்களை சேர்க்க மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளார்கள். மாடி வீடு என்பது விடுபட்டுவிட்டது என்பது தட்டச்சு பிழையால் ஏற்பட்டதல்ல. அதேபோல் வேறு ஒரு சொத்து விபரமும் தட்டச்சு பிழையால் ஏற்பட வாய்ப்பில்லை. எதிர்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின் இரண்டு வருடம் கழித்து இந்த திருத்தமனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. வழக்குக்கு தொடர்பில்லாத சொத்து விபரம் மற்றும் நான்கெல்லைகளை கூறிவிட்டு அவற்றை நீக்க கோருவதும் சரியல்ல. அவை கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் எல்லைக்குட்பட்டதாக உள்ள 20.கி.மீ தூரத்தில் உள்ள சொத்து ஆகும். வழக்கில் உள்ள Lacuna–வை பூர்த்தி செய்யவே மனு போடப்பட்டுள்ளது. தட்டச்சு பிழை என்ற காரணம் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மனுதாரர்கள் வேறு புதிய வழக்கு தான் தாக்கல் செய்ய வேண்டுமே தவிர இந்த வழக்கை திருத்த முடியாது. எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும்.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.23 11:59:50 +0530

**3.** 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 23.02.2024 அன்று எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

**4.** மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

**5**.இம்மனுவில் மனுதாரர்கள் /வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பிராது தாக்கல் செய்யும் போது தட்டச்சு பிழையாக 2–வது ஒரு சொத்தில் வழக்கு தரப்பினர்களுக்கு தொடர்பு இல்லாத சொத்து சொத்து விபரத்தில் சேர்த்து தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், எனவே மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்து உத்திரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தட்டச்சு பிழை என்று கூறி சொத்து விபரத்தில் புதிய விவரங்களை சேர்க்க மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மாடி வீடு என்பது விடுபட்டுவிட்டது என்பது தட்டச்சு பிழையால் ஏற்பட்டதல்ல என்றும், அதேபோல் வேறு ஒரு சொத்து விபரமும் தட்டச்சு பிழையால் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், வழக்கில் உள்ள Lacuna–வை பூர்த்தி செய்யவே மனு போடப்பட்டுள்ளது என்றும் எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால்

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.23 12:00:00 +0530

வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. மேலும் வழக்கின் விசாரணை இன்னும் தொடங்கவில்லை என்பதாலும், இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை என்பதாலும், இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.23 12:00:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | - இல்லை - |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.23 12:00:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.04/2024-ல்
அசல் வழக்கு எண்.190/2021
நாள்.23.09.2025.